---

**இந்து காலாசார நிதியம் - 2014**

---

இந்து கலாசார நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1985 இன் 31 ஆம் இலக்க இந்து கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(4) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் மீதான என்னுடைய கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்திற்கான பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின்

மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்து கலாசார நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீ.எப். 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | |
| (i) 4.1(அ) ஆம் பந்தி | அங்கீகரிக்கப்பட்ட பாதீடின்றி உரிய நிதியாண்டில் எச்செலவினமும் செய்யமுடியாத போதிலும் நிதியத்தால் மீளாய்வாண்டிற்குரிய பாதீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படாமல் ஆண்டின் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) 4.2 ஆம் பந்தி | முதலீடு தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 1,366,697 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,969,021 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 602,324 வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன் அதற்கு ஏனைய வருமானம் ரூபா 116,827 இனால் குறைவடைந்தமையும் கோயில்களுக்கான மானியங்கள் மற்றும் சீருடைகளின் கொள்வனவுச் செலவினம் ரூபா 399,050 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதியத்தின் பெறுவனவுகளில் 56 சதவீதம் நிலையான வைப்புக்களிலிருந்து கிடைக்கின்ற வட்டி வருமானம் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் அதன் வட்டி வீதமும்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 12.5 சதவீதம் முதல் 7.5 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. இந்த நிலைமை நிதியத்தின் எஞ்சிய செயற்பாடுகளுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்து கலாசார நிதியத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக தேவையான நிதியை உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் சேகரிக்கும் சட்டரீதியான ஏற்பாடு அந்த அதிகாரச்சட்டத்தின் 06 ஆம் அத்தியாயத்தின் படி அவகாசமளிக்கப்பட்ட போதிலும் அந்த சட்டரீதியான ஏற்பாடுகளைப் பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது நிதியைச் சேகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று காணப்படாததுடன், இந்து வணக்கத்தலங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் இந்து மதத்தையும் கலாசாரத்தையும் மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற நிதியத்தின் பிரதான நோக்கங்களை அடைந்து கெள்வதற்காக நிதி மற்றும் பௌதீக இலக்குகளைக் காண்பிக்கின்ற செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மேற்கூறப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களிற்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக 1129 சேலைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக ஒரு சேலைக்கு ரூபா 1,050 படி ரூபா 1,185,450 தொகை தனியார் நிறுவனமொன்றிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவுகளுக்குரிய நிதியத்திற்கும் வழங்குனருக்குமிடையே முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இதன் படி வழங்கல் தொடர்பான நிபந்தனைகள் எதுவும் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வழங்குனரால் சேலை இருப்புக்கள் உரிய மாதிரிகளின் படி வழங்கப்பட்டமைக்கான தொழில்நுட்ப மதிபபீட்டுக் குழுவின் அறிக்கையின்றி வழங்கலுக்குரிய முழுத்தொகையும் வழங்குனருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கை திட்டம்

நிதியத்தின் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், இந்துக் கோயில்களுக்காக நிதி உதவி வழங்குதல், மரணத்திலிருந்து விடுதலைசெய்யப்பட்ட மாடுகளைப் பராமரிப்பதற்காக உதவி வழங்குதல் மற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களிற்கான சேலைகளைக் கொள்வனவு செய்தல் என 3 பிரதான நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அந்த நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது பின்வரும் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியத்தின் ஆளுநர் சபையின் 7 ஆவது கூட்ட அமர்வின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கீரிமலை நகுலேஸ்வரம் கோயிலில் மாடொன்றைப் பராமரிப்பதற்காக மாதமொன்றிற்கு ரூபா 5,000 படி ரூபா 60,000 தொகை உரிய கோயிலுக்கு வழங்குவதற்காக தெல்லிப்பளை பிரதேச செயலாளருக்கு மீளாய்வாண்டின் போது காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அப் பணம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படுகின்றனவா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திருகோணமலை மாவட்டத்தில் உத்திராதி பிள்ளையார் கோயில் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தில் அன்னை ஸ்ரீ சாரதா தேவி அறநெறிப் பாடசாலைக் கட்டடிடம் என்பவற்றைப் புனரமைப்புச் செய்வதற்காக ரூபா 300,000 தொகை மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் இந்த நிதி பயன்படுத்தப்பட்ட முறை தொடர்பான செலவின அறிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட வேலை அறிக்கை பெறப்பட்டு அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கொள்வனவு

(இ) திட்டமிடல்